[1993 ஏப்ரல் 12

இணைப்பு— III.

பொதுப்பணித் துறை.

கட்டிடப் பிரிவு

1992-93 பணிகள் பற்றிய ஆய்வுரை.

வருவாய், காவல், மருத்துவம், சிறை, நீதி, விவசாயம், வணிகவரி, கருவூலம் மற்றும் கணக்கு, பொது, சட்டம், கல்வி, கால்நடைப் பராமரிப்பு போன்ற அரசு துறைகளுக்கான கட்டிடங்களை திட்டமிட்டு வடிவமைத்து கொடுப்பது பொதுப் பணித் துறையின் கட்டிடப் பிரிவின் பொறுப்பாகும். இவை தவிர நினைவு இல்லங்கள், ஸ்தூபிகள், சதுக்கங்கள் கட்டிடப் பராமரிக்கும் பணியையும் மேற்கொள்கிறது. மற்றும் மாநில அரசுகளின் சார்பு துறைகள், கழகங்களான தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம், பல்கலைக் கழகங்கள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், ஆடுகள் வளர்ப்புத் திட்டம், டானிடா வளர்ச்சித் திட்டம், ஐரோப்பியப் பொருளாதார வளர்ச்சிக் குழுத் திட்டம், இந்திய மக்கள் தொகை திட்டப் பணிகள் (IUDP and IDSMT) ஐரோப்பியப் பொருளாதார வளர்ச்சிக் குழுமம், உலகவங்கி மற்றும் ஏனைய குழுமம், நிதியுதவி பெறும் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டும் பணிகள், வைப்பு நிதிப் பணிகளாக இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. ரூ. 66.70 கோடிகள் மதிப்புள்ள 407 கட்டிடங்கள் முன்னேற்றம் முடியும் நிலையில் உள்ளன. 1992-93 நிதி ஆண்டில் பல்வேறு அரசு கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள செலவினம் ரூ. 74.52 கோடி ஆகும்.

2. கீழ்க்கண்ட மிக சிறப்பு வாய்ந்த கட்டிடங்கள், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னதாக முடிக்கப்பட்டுள்ளன. அவைகள், டாக்டர் எம்.ஜி.ஆர். சமாதி, சேலத்திலுள்ள மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் இருதய பிரிவிற்கும் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கும் ஏழு மாடிக் கட்டிடம், கிள்ளிக்குளம் மற்றும் குமுலூரில் விவசாயக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிக் கூடக் கட்டிடங்கள் மேலும் 120 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் முடியும் தருவாயில் உள்ளன. இதைத் தவிர பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 40 இடங்களில் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

3. கவர்னர் மாளிகை, அரசினர் தோட்டம், அமைச்சர்கள் மற்றும் மிக முக்கியமானவர்கள் இல்லக் கட்டிடப் பராமரிப்பு ணியும் இத்துறையை சார்ந்தது ஆகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 12]

4. இத்துறை நவீன கட்டிட தொழில் நுட்பத்தைக் கைக்கொள்வதுடன் கட்டிட உறுதித் தன்மையை பாதிக்காமல் கட்டிடம் கட்டும் செலவினங்களைக் குறைப்பதில் தீவிர கவனம் செலுத்துகிறது. அதற்கென்று தனிக் கட்டிட ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கான கருதுருவுக்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த கட்டிடம் ரூ. 25.00 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

5. 1993-94 ஆம் ஆண்டில் சுமார் 94.63 கோடிக்குத் திட்டப் பணிகள், திட்டத்தில் சேராப் பணிகள், மத்திய நிதி உதவிப் பணிகள் மாநில மற்றும் மத்திய அரசு சம்பந்தப்பட்ட உதவி பெறும் பணிகள், வைப்புநிதிப் பணிகள், செலுத்து நிதிப் பணிகள், பராமரிப்புப் பணிகள் ஆகிய தலைப்பின் கீழ் கட்டிடங்கள் கட்டப்பட உள்ளன. விவசாய இயக்குநரகத்திற்கு கூடுதல் அலுவலகக் கட்டிடம், திண்டுக்கல் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அரசுப் பணியாளர் குடியிருப்புகள், சேலம் மற்றும் இராமநாதபுரத்தில் நீதிமன்றக் கட்டிடங்கள், தூத்துக்குடியில் மாவட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்கள். தாலுக்கா மருத்துவமனைகளை 13 இடங்களில் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கும் மிக முக்கியப் பணிகளாகும். புதியதாகப் பிரிக்கப்பட்ட நாகை-காயிதே மில்லத், திருவண்ணாமலை-சம்புவராயர், விழுப்புரம்-வள்ளலார் ஆகிய மாவட்டங்களுக்கு பெருந்திட்ட வளாகம் அமைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் இதர கட்டிடங்கள் கட்டுவதற்கு 1993-94-ல் திட்டமிடப்பட்டுள்ளன.

6. தற்போது நடைமுறையிலுள்ள பல்வேறு துறைகள்/ அரசு சார்புத் துறைகள் / கழகங்களின் கீழ் வரும் கட்டுமானப் பிரிவுகளைப் பொதுப்பணித் துறையின் கீழ் வரும் ஓர் அங்கமாக ஒருங்கிணைப்பு செய்ய 21—12—1992 நாளிட்ட பொதுப் பணித்துறை அரசாணை நிலை எண் 1762-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7. மின் பணிகளில் உள்ள நவீனக் கருவிகள் சம்பந்தப்பட்ட பணிகளில் உயர்மட்ட தொழில்நுட்ப உத்திகளைக் கையாள 3 உயர்மட்ட அதிகாரிகளைக் கண்காணிப்புப் பொறியாளர் (மின்) என்ற பணி நிலையில் பொதுப்பணித் துறையின் பிரிவில் பணியமர்த்தி இருபது ஆண்டுகளாக நிலுவையில் இருந்த கருத்துருவுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கண்ட அரசு ஆணைப்படி, சென்னையிலும் மதுரையிலும் மின்வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட இரண்டு மின் வட்டங்களில் உள்ள மின் கண்காணிப்புப் பொறியாளர்களை ஒத்திசைவிற்கும் அதிகாரியாகவும், தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களுக்கு உதவி புரியவும், இணைத் தலைமைப் பொறியாளர் (மின்) பதவி கண்காணிப்புப் பொறியாளர் (மின்) பணிநிலையில் உருவாக்கப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 12

8. பொதுப்பணித்துறையின் கட்டிடப் பிரிவு கோரிக்கை எண். 36 மற்றும் 55-ஐ நடைமுறைப்படுத்தி வருகிறது.

(அ) மானியக் கோரிக்கை எண் 36—பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள்—

இக்கோரிக்கை பொதுப்பணித் துறையின் கீழுள்ள கட்டிடங்களின் பராமரிப்பு, மேம்பாடு மற்றும் பழுது பார்க்கும் செலவினங்கள் அனைத்தையும் கொண்டதாகும். பொதுப் பணித் துறையிலுள்ள கட்டிடங்களுக்கான சொத்து வரி கட்டுதல் ஆகியவையும் இக்கோரிக்கையில் அடங்கும். 1992-93-ம் ஆண்டிற்கான இக்கோரிக்கையின் மொத்த மூலதனம் ரூ. 2,486 இலட்சங்களாகும். இதில் 1992-93 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்ட மூலதனம் தவிர புரோரேட்டா மூலதனம் அடங்காது.

(ஆ) மானியக் கோரிக்கை எண் 55—கட்டிடங்கள் மீதான மூலதனக் கணக்கு—

இக்கோரிக்கையில் எல்லா புதிய பெரிய கட்டிடப் பணிகளுக்கான செலவினங்கள் அடங்கும். 1992-93 ஆம் ஆண்டிற்கான மொத்த மூலதனம் ரூ. 5,050 இலட்சங்களாகும். இதில் 1992-93 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்ட மூலதனம் தவிர புரோரேட்டா மூலதனம் அடங்காது.

1. கீழ்க்கண்ட பெரிய வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

		(ரூபாய் கோடியில்.)
1.	சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் குழந்தைகள் நலக்கட்டிடம் கட்டுதல்	1.99
2.	சென்னை பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவிற்கும் இருதய சிகிச்சை பிரிவிற்கும் ஏழு மாடிக் கட்டிடம் கட்டுதல்	1.39
3.	தமிழ்நாட்டில் 16 இடங்களில் அறுவை சிகிச்சை மற்றும் கருத்தடைப் பிரிவுகள் கட்டுதல்	1.26
4.	சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி கட்டும் பணிகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனை சேலம் பயிற்றுவிக்கும் மருத்துவ மனையாக மாற்றுவிக்கும் பணி	3.75

1993 ஏப்ரல் 12]

	(ரூபாய் கோடியில்)
5. டாக்டர் எம்.ஜி.ஆர். சமாதி திருத்தியமைக்கும் பணி (12/92-ல்) முடிவுற்றது ..	1.25
6. தமிழ்நாட்டில் 40 இடங்களில் பிற்பட்டோர் வகுப்பு மற்றும் தாழ்த்தப்பட்டோர் பிரிவுக்கு விடுதிகள் கட்டுதல்	4.11
7. தமிழ்நாட்டில் 14 இடங்களில் இளங்குற்றவாளி இல்லம் கவனிப்பு இல்லம், சிறப்பு விடுதிகள் கட்டுதல்	1.19
8. ஹோசூரில் 50 படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனைக் கட்டுதல் ..	1.91
9. நாமக்கல்லில் கால்நடை மருத்துவக் கல்லூரியில் அகாடமி பகுதி, கிளினிக்குகள் பகுதி மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டுதல் ..	1.94
10. புதுக்கோட்டையில் கால்நடைப் பண்ணைக்கு அலுவலகம், வீடுதி மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்	1.16
11. சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள கிள்ளிக்குளத்தில் விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம் கட்டுதல்	1.39
12. தமிழ்நாட்டில் 120 இடங்களில் தொடக்க நல நிலையம் / மருத்துவ அதிகாரி குடியிருப்புகள் கட்டுதல்	8.10

2. கீழ்க்கண்ட பெரிய வேலைகள் தற்சமயம் நடந்துகொண்டுள்ளது.

1. சென்னையில் புதிய மாவட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல்	
2. திருச்சியில் சட்டக் கல்லூரி கட்டுதல் ..	1.20
3. சேலத்திலுள்ள மோகன் குமாரமங்கல மருத்துவக் கல்லூரியில் மகளிருக்கு விடுதி கட்டுதல்	1.18
4. டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு நிர்வாக அலுவலகம் கட்டுதல்	1.16

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 12

(ரூபாய் கோடியில்.)

5.	சென்னையில் உலக வங்கி உதவியுடன் விபத்து மற்றும் அவசர மருத்துவ உதவிக்கான கட்டிடங்கள் கட்டுதல்	5.68
6.	வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள முகுந்தராயபுரத்தில் ஆடு வளர்ப்புப் பண்ணை அமைத்தல்	1.18
7.	தமிழ்நாட்டிலுள்ள 14 இடங்களில் உள்ள சிறைகளை நவீனப்படுத்துதல்	1.53
8.	தமிழ்நாட்டிலுள்ள 16 இடங்களிலுள்ள தலைமை மருத்துவமனையில் நீராவியில் சலவை செய்யும் இயந்திரம் நிறுவுவது ..	8.00
9.	மதுரையிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கூடுதலாகப் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்	1.81
10.	கோவையிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் 190 கூடுதலாகப் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்	2.58
11.	சென்னை அயனாவரத்திலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கூடுதலாகப் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்	3.69
12.	திருச்சி மாவட்டத்தில் குமுளூரில் விவசாயக் கல்லூரி கட்டுதல்	1.92
13.	பெரியார் மாவட்டத்திலுள்ள புஞ்சைபுளியம்பட்டியில் பேருந்து நிலையம் மற்றும் கடைகள் கட்டுதல்	1.05
14.	தமிழ்நாட்டில் 17 இடங்களில் தொடக்க நல நிலையங்கள் கட்டுதல்	1.04
15.	தமிழ்நாட்டில் 26 இடங்களில் தொடக்க நல நிலையங்கள் கட்டுதல்	2.08
16.	தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி பிரிவிற்கு அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல்	1.43

1993 ஏப்ரல் 12

3. கீழ்க்கண்ட பெரிய வேலைகள் 1993-94 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளன.

	(ரூபாய் கோடியில்.)
1. சென்னை, சேப்பாக்கத்தில் விவசாய இயக்குநரகத்திற்கு கூடுதல் அலுவலகம் கட்டுதல் ..	1.35
2. திண்டுக்கல்லில் பெருந் திட்ட வளாகத்தில் அரசாங்கப் பணியாளர் 276 எண்ணிக்கை குடியிருப்பு கட்டுதல்	4.05
3. சேலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுதல்	3.25
4. இராமநாதபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடங்கள் மற்றும் வழக்கறிஞர் மன்றம் கட்டுதல்	2.27
5. தமிழ்நாட்டில் 13 இடங்களிலுள்ள தாலுகா மற்றும் புதிய தாலுக்காவில் உள்ள மருத்துவமனைகளில் 32 படுக்கைகள் கொண்ட கட்டிடங்கள் கட்டுதல்	1.11
6. சிதம்பரனார் மாவட்டத்திற்கு தூத்துக்குடியில் மாவட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் ..	3.09
7. காயிதே மில்லத் மாவட்டத்திற்கு நாகையில் மாவட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் ..	..
8. வள்ளலார் மாவட்டத்திற்கு விழுப்புரத்தில் மாவட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் ..	..
9. திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டத்திற்கு திருவண்ணாமலையில் மாவட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல்	..